# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495 / 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.1**

| | | |
|---|---|---|
| பெயர் | – | செந்தில்முருகன் |
| தந்தை பெயர் | – | குத்தாலிங்கம் |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| சாதி | – | |
| மதம் | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. N.Venkateshwaran in accordance with the Provisions of Act X of 1873 on **the 26th day of July 2023.**

(எதிரி ஆஜர்.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது கங்கைகொண்டான் பகுதி 1 கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 1.7.2022 அன்று நாரணம்மாள்புரம் பகுதி 1 கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகப் பணியில் இருந்தபோது நண்பகல் 12.30 மணி அளவில் 60 வயது மதிக்கத்தக்க அழுகிய நிலையில் ஒரு பிணம் கிடப்பதாக தகவல் கிடைக்கப்பெற்று 1 மணி அளவில் நானும், தலையாரியும் சம்பவ இடமான நாரணம்மாள்புரம், ஹவுசிங்போர்டு காலனி பேஸ் 2ல் சென்று பார்த்தபோது 60 வயது மதிக்கத்தக்க ஆண் பிணம் அழுகிய நிலையில் ரோஸ் கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை போட்டிருந்தார். அவர் அருகில் புளூ மற்றும்

வெள்ளை கலர் வயர்கூடை ஒன்றும், ஆடு கட்டும் நைலான் கயிறு ஒன்றும் இருந்தது. அக்கம் பக்கம் விசாரித்தோம். யார் என்று விவரம் தெரியவில்லை. பின்பு காவல்நிலையம் சென்று 3 மணிக்கு நான் புகார் மனு எழுதி கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. 27.7.2022 அன்று காவல் ஆய்வாளர் இறந்து போன மாயாண்டி என்பவரின் மனைவி புஷ்பம், செல்லத்துரை, பழனி ஆகிய 3 பேருக்கும் என் முன்பு சிசிடிவி கேமரா பதிவுகளை போட்டுக் காட்ட வேண்டும் என்று என்னை அழைத்திருந்தார். அதன் பேரில் 11.30 மணிக்கு தாழையூத்து காவல்நிலையத்திற்கு நானும், தலையாரியும் சென்றோம். காவல்நிலையத்தில் கம்ப்யூட்டரில் சிசிடிவி கேமரா பதிவுகளை போட்டு காண்பித்தார்கள். அந்த கம்ப்யூட்டரில் புளூ கலர் டிவிஎஸ் எக்ஸ்எல்– வண்டியில் பின்னால் அமர்ந்து சென்றவர் புஷ்பம் என்பவர் கணவர் மாயாண்டி என்றும், வண்டியை ஓட்டிச் சென்றவர் மாரிமதன் என்றும் கூறினார். அன்று அந்த வண்டியை ஓட்டிச் சென்ற நபர் நீதிமன்றத்தில் ஆஜர் எதிரியாக உள்ளார். நான் அன்றையதினம் பார்த்த ரோஸ் கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று, வயர்கூடை ஒன்று, நைலான் கயிறு ஒன்று ஆகியவை என்னிடம் காட்டப்படுவது தான். ஊண்பட்ட வெள்ளை கலரில் லைட் ரோஸ் மற்றும் புளூ கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று சா.பொ.1, புளூ கலர் மற்றும் ரோஸ் கலரில் உள்ள பிளாஸ்டிக் வயர்கூடை ஒன்று சா.பொ.2. மஞ்சள் கலர் நைலான் கயிறு ஒன்று சா.பொ3. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் நாரணம்மாள்புரம் கிராமத்திற்கு 1.8.2021 அன்று பணிக்கு வந்தேன். எங்கள் அலுவலகம் பேரூராட்சி அலுவலகம் அருகில் உள்ளது.

எங்கள் ஆபிஸ் உள்ள இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது, ஆட்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். என்னுடன் 2 தலையாரிகள் வேலை பார்க்கிறார்கள். 2 தலையாரிகளும் எப்போதும் என்னுடன் தான் அலுவலகத்தில் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் தினமும் அலுவலகத்திற்கு 10 மணிக்கு வருவேன். அவசர வேலை என்றால் சீக்கிரம் வருவேன். எனக்கு அலுவலக நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை. நான் அலுவலகத்திற்கு வந்தவுடன் பதிவேட்டில் நானும், தலையாரிகளும் கையெழுத்து போடுவோம். தினசரி வருகைப் பதிவேட்டை நான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். வருகைப் பதிவேட்டில் எந்த இடத்திற்கு செல்கிறோம் என்று எப்போதும் எழுதி வைக்க மாட்டோம். அவசர வேலையாக வெளியில் செல்லும்போது எழுதி வைக்க வேண்டாம் என்று என்னுடைய உயரதிகாரிகள் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. எந்த நம்பரில் இருந்து எனக்கு போன் வந்தது என்று என்னால் சொல்ல இயலாது. எந்த நம்பரில் இருந்து யார் போன் செய்தார்கள் என்பது குறித்து என்னுடைய போனில் 20 நாட்களில் கண்டுபிடித்து விடலாம் என்றால் சரிதான். போனில் தகவல் சொன்ன நபரிடம் ஸ்டேட்மெண்ட் வாங்க வேண்டும் என்று எனக்கு தோன்றியதா என்றால் இல்லை. தகவல் கிடைத்த விவரத்தை எங்கள் அலுவலக பதிவேட்டில் குறித்து வைத்துள்ளேனா என்றால் சம்பவம் நடந்ததை விவரமாக எழுதி வருவாய் ஆய்வாளர் மூலம் தாசில்தாரிடம் எழுத்துமூலமாக 4 மணிக்கு கொடுத்துள்ளேன். தாசில்தார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்களை விசாரித்தாரா என்றால் இல்லை. சம்பவம் சம்பந்தமாக யார் யாரிடம் விசாரித்தேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான்

விசாரித்த நபர்களிடம் அவர்களது பெயர் விலாசம் கேட்டு எழுதவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து நான் யாதாஸ்து, நமூனா எழுதினேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் செல்லும்போது என்னுடன் தலையாரி ஒருவர் தான் வந்தார். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது அங்கு ஆட்கள் யாரும் இல்லை. என்னிடம் தகவல் சொன்ன நபர் சம்பவ இடம் குறித்த எல்லா விவரங்களையும் சொன்னார். சம்பவ இடத்திற்கு அருகில் 10 அடி தூரத்தில் பழைய தார் ரோடு உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் 2 சிமெண்ட் வாறுகால் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அதன் அருகில் 10 எலக்ட்ரிக் போஸ்ட்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து 100 அடி தூரத்தில் மேற்காக கல்குவாரிக்கு செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். கல்குவாரியில் வேலை பார்க்கும் நபர்கள், வாகனங்கள் அனைத்தும் அந்த ரோட்டின் வழியாகத் தான் செல்லும் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகில் 200, 300 அடி தூரத்தில் புதிதாக வீடுகள் கட்டப்பட்டு கொண்டிருந்தன என்றால் சரிதான். சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் 350 அடி தூரத்தில் 4, 5 குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த 4, 5 வீடுகளில் ஆட்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். தாழையூத்தில் ஜெயந்திரா சரஸ்வதி பள்ளி தென்கலம் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். பேஸ் 2 சர்வே எண்ணை எங்கள் அலுவலக ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும் என்றால் சரியல்ல. பார்க்காமலும் சொல்லலாம். நான் புகார் மனுவை தாசில்தார், ஆர்.ஐ.யிடம் கலந்து பேசித் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. முதன் முதலில் நான் சம்பவ இடத்திற்கு போன பிறகு மீண்டும் 2 வது முறை அங்கு செல்லவில்லை. நான் காவல்நிலையத்திற்கு

சென்றபோது சார்பு ஆய்வாளர் இருந்தார். நான் சொன்ன விவரத்தை சார்பு ஆய்வாளர் எழுதினாரா என்று எனக்குத் தெரியாது. நான் தான் எழுதிக் கொடுத்தேன். நான் காவல்நிலையம் சென்றபோது சார்பு ஆய்வாளரைத் தவிர ஆய்வாளர், டி.எஸ்.பி. இருந்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. நான் காவல்நிலையத்தில் வைத்து அன்றையதினம் புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் கையெழுத்து செய்தேன். புகாரை நான் காவல்நிலையத்தில் வைத்து தான் எழுதிக் கொடுத்தேன். காவல்நிலையத்தில் இருந்த சார்பு ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் டி.எஸ்.பி. ஆகியோர்களின் ஆலோசனையின் பேரில் அவர்கள் எவ்வாறு புகாரை தயாரிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்ததின் பேரில் நான் புகாரை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல என் முன்னிலையிலும், தலையாரி முன்னிலையிலும் சிசிடிவி கேமராவை போட்டு காண்பிக்கவில்லை என்றும், பழனி, புஷ்பம் ஆகியோர் வரவில்லை என்றும் அவர்கள் அடையாளம் காட்டியதாக சொல்வதும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த சம்பவம் மற்றும் வழக்கு குறித்து ஆர்.டி.ஓ, தாசில்தார் என்னை விசாரிக்கவில்லை. ஆர்.டி.ஓ, தாசில்தார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு குறித்து ரெவின்யூ அதிகாரிகள் யாரும் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு தலையாரியுடன் சென்றதாகவும், சம்பவ இடத்தை பார்த்ததாகவும், சட்டை மற்றும் வயர்கூடை, நைலான் கயிறை பார்த்ததாக சொல்வது பொய் என்றும், நான் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும், பிரேதம் கிடந்த இடமே தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எந்த தகவலுமே தெரியாத சூழ்நிலையில் போலிசார் இப்படி ஒரு புகார்

கொடுங்கள் என்றும், வேறு வழியில்லை என்றும், பிரேதம் ரொம்ப நாளாக அழுகி அடையாளம் தெரியாமல் இருக்கிறது என்றும், வழக்கு போட வேண்டும் என்றும் சொன்னதின் பேரில் போலிசாருக்கு உதவி செய்யும் நோக்கத்தில் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495 / 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.2**

| | | |
|---|---|---|
| பெயர் | – | தனுஷ்கோடி |
| தந்தை பெயர் | – | முத்துபாண்டி |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| சாதி | – | |
| மதம் | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. N.Venkateshwaran in accordance with the Provisions of Act X of 1873 on **the 26th day of July 2023.**

(எதிரி ஆஜர்.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் நாரணம்மாள்புரம் பகுதி 1 கிராம உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறேன். 1.7.2022ம் தேதி நானும், கிராம நிர்வாக அலுவலரும் அலுவலகத்தில் இருந்தோம். பகல் 12.30 மணி அளவில் ஹவுசிங்போர்டு காலனியில் ஒரு பிரேதம் கிடப்பதாக தகவல் கிடைத்து நானும், கிராம நிர்வாக அலுவலரும் அங்கு சென்றோம். அந்த இடத்தில் சென்று தேடி பார்த்தபோது அழுகிய நிலையில் ஒரு ஆண் பிரேதம் கிடந்தது. பிரேதத்தின் மீது ரோஸ் கலர் கோடு போட்ட சட்டை இருந்தது. பக்கத்தில் ஒரு வயர் கூடையும், ஒரு ஆடு கட்டும் கயிறும் கிடந்தது. அந்த பிரேதத்தின் மீது கிடந்த சட்டை, வயர் கூடை, கயிறு ஏற்கனவே சா.பொ.1 முதல் சா.பொ.3

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் விசாரித்து பார்த்தோம். யார் என்று தெரியவில்லை. பின்பு நானும், விஏஓ–ம் காவல்நிலையம் சென்று விஏஓ காவல்நிலையத்தில் ஒரு புகார் மனு கொடுத்தார். அதன்பிறகு என்னை காவல்நிலையத்திற்கு 2.7.2022 அன்று வரச் சொன்னார்கள். நானும், விஏஓ–ம் சென்றோம். அங்கு இறந்து போனவரின் மனைவி புஷ்பம், பழனி, செல்லத்துரை ஆகியோர்கள் இருந்தார்கள். அங்கு அவர்களுக்கு எங்கள் முன்னிலையில் சிசிடிவி கேமரா பதிவுகளை போட்டு காண்பித்தார்கள். சிசிடிவி பதிவுகளை பார்க்கும்போது டிவிஎஸ் எக்ஸ்எல் TN 72 BQ 1518 வண்டியில் பின்னால் உட்கார்ந்து இருப்பவர் தன் கணவர் என்றும், ஓட்டிச் சென்றவர் மாரிமதன் என்றும் சொன்னார். வண்டியை ஓட்டிச் சென்றவர் நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் அவர் மாதிரி தெரிகிறது. டி.வி.யில் பார்த்து ரொம்ப நாளாகி விட்டதால் சரியாகத் தெரியவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

தகவல் தெரிந்தவுடன் தச்சநல்லூர், தாழையூத்து காவல்நிலையத்தில் நாங்கள் எதுவும் கேட்கவில்லை. சம்பவ இடத்திற்கு நாங்கள் போகும்போது வேறு யாரும் வரவில்லை. காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க போகும்போது நானும் விஏஓ–உடன் சென்றேன். போனில் தகவல் சொன்ன நபர் யார் என்று எனக்கும், விஏஓ–க்கும் தெரியாது. காவல்நிலையத்திற்கு போகும் போது சார்பு ஆய்வாளர் இருந்தார். வேறு போலிசார் இருந்திருப்பார்கள். எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சிசிடிவி கேமரா பதிவுகளை போட்டுக் காண்பித்ததாக நான் சொல்வது பொய் என்றும், நான் சொல்வது போல சிசிடிவி கேமரா பதிவுகளை பார்ப்பதற்கு

நான் சொன்ன நபர்கள் வரவில்லை என்றும் நான் சிசிடிவி கேமரா பதிவுகளை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அன்றையதினம் காவல்நிலையத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக எங்களது உயரதிகாரிகளுக்கு அறிக்கை கொடுத்து விட்டோம். என்னை தாசில்தார், ஆர்.டி.ஓ. விசாரிக்கவில்லை. விஏஓ-வை விசாரித்தார்களா என்று எனக்குத் தெரியாது. காவல்துறையினர் சொல்லிக் கொடுத்தற்கு ஏற்ப நான் அரசு ஊழியர் மற்றும் தலையாரி என்பதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்திற்கு அன்றையதினம் காலை 9.30 மணிக்கு வந்துவிட்டேன். அந்த விவரத்தை அன்றையதினம் எங்கள் வருகைப் பதிவேட்டில் கையெழுத்து செய்துள்ளேன். நான் அன்றையதினம் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும், யாரும் தகவல் சொல்லாமல் போலிசார் சொன்னதற்கு ஏற்ப இந்த பொய்யான வழக்கை பதிவு செய்வதற்கு நானும், விஏஓ-ம் உறுதுணையாக இருந்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495 / 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.3**

| | | |
|---|---|---|
| பெயர் | – | புஷ்பம் |
| கணவர் பெயர் | – | மாயாண்டி |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| சாதி | – | |
| மதம் | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. N.Venkateshwaran in accordance with the Provisions of Act X of 1873 on **the 26th day of July 2023.**

(எதிரி ஆஜர்.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் கரையிருப்பில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு 3 பெண் குழந்தைகள். 1 பெண் குழந்தைக்கு திருமணம் ஆகியுள்ளது. 26.6.2022 காலை 11 மணிக்கு வீட்டில் இருந்து TVS XL எண்.1518 புளூ கலர் வண்டியில் என் கணவர் போனார். அவர் போகும்போது ரோஸ் கலர் சட்டை போட்டிருந்தார். வயர்கூடை, நைலான் கயிறு ஆகியவற்றை கொண்டு சென்றார். அவைகள் தான் என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது என்றால் சரிதான். என் கணவர் போகும்போது மகாராஜன் ரூ.8,000/- தரவேண்டும் என்றும், வியாபாரத்திற்கு ஆட்டு குட்டி பிடித்து வருவேன் என்றும் சொன்னார்.

அவர் வீட்டிற்கு திரும்ப வரவில்லை. அதனால் மறுநாள் 27.6.2022ம் தேதி இரவு 8.30 மணிக்கு தச்சநல்லூர் காவல்நிலையம் சென்று என் கணவர் போனவர் திரும்ப வரவில்லை என்று ஒரு புகார் மனு எழுதி கொடுத்தேன். அதன் பிறகு 1.7.2022 ம்தேதி சிதம்பரம் நகர் ஹவுசிங்போர்டு காலனியில் பிணம் கிடப்பதாக போலிசார் சொன்னதின் பேரில் நான் போய் பார்த்தேன். நான் என் கணவர் அணிந்திருந்த சட்டை, அவர் கொண்டு சென்ற கூடை, கயிறு ஆகியவற்றை பார்த்து இறந்து கிடப்பது என் கணவர் தான் என்று அடையாளம் காட்டினேன். 27ம் தேதி தாழையூத்து போலிஸ் காவல்நிலையத்தில் வைத்து கேமரா படங்களில் வண்டியில் என் கணவர் போனதை காட்டினார்கள். என் கணவர் வண்டியின் பின்னால் உட்கார்ந்து இருந்தார். ஒரு பையன் வண்டியை ஓட்டிச் சென்றார். அந்த வண்டியை ஓட்டிச் சென்ற பையன் நீதிமன்றத்தில் இருக்கிறாரா என்றால் அந்த பையன் நீதிமன்றத்தில் இருக்கிறார் என்று சாட்சி கூறுகிறார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் சொல்வது போல என் கணவர் போகும்போது மகாராஜனிடம் ரூ.8,000/– பணம் வாங்கப் போவதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவரை ஒரு நாள் தான் காணவில்லை. என் கணவரை காணவில்லை என்று தெரிந்தவுடன் என் கணவரின் நண்பர்களான பழனி, மகாராஜன் ஆகியோரிடம் விசாரித்தேன். மறுநாள் நான் தச்சநல்லூர் காவல்நிலையத்திற்கு சென்று என் கணவரை காணவில்லை என்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். தச்சநல்லூர் காவல்நிலையத்திற்கு சென்று என் கணவரை கண்டுபிடித்தீர்களா என்று கேட்டேனா என்றால்

கேட்டேன். பிரேதம் கிடந்த விவரத்தை தாழையூத்து காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் தான் சொன்னார். தாழையூத்து காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் என்னிடம் தகவல் சொன்னது மதியம் 2.30 மணி. நான் தாழையூத்து காவல்நிலையத்திற்கு உடனடியாக சென்றேன். தாழையூத்து காவல்நிலையம் செல்லும்போது என்னுடைய கொழுந்தன் பரமசிவன் என்பவர் தான் என்னுடன் வந்தார். அதன் பிறகு தாழையூத்து காவல்நிலையத்தில் இருந்து போலிசார் எங்களை பிரேதம் கிடந்த இடத்திற்கு கூட்டிச் சென்றார்கள் என்றால் சரிதான். நாங்கள் பிரேதம் கிடந்த இடத்திற்கு போகும்போது 10, 20 நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அங்கு வைத்து விஏஓ, தலையாரி மற்றும் சொந்தக்காரர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடத்தில் நாங்கள் 1 மணி நேரம் இருந்திருப்போமா என்றால் உடனே வந்துவிட்டோம். நாங்கள் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்றபோது போலிஸ் சார்பு ஆய்வாளர், மற்றும் இன்ஸ்பெக்டர் இருந்தார்கள் என்றால் சரிதான். என் கணவர் ஆட்டு வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். என் கணவர் கொத்தனார் கையாள் வேலைக்கு போவதுண்டா என்றால் போவதுண்டு. ஆடுகள் வியாபாரம் செய்ததில் என் கணவருக்கும், மற்ற சில நபர்களுக்கும் ஏற்பட்ட தொழில் விரோதம் காரணமாக என் கணவர் தலைமறைவாகி விட்டார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை பார்த்த பிறகு தாழையூத்து காவல்நிலையத்திற்கு போகவில்லை. ஆனால் திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வைத்து என்னிடம் தாழையூத்து காவல்நிலைய அதிகாரிகள் என்னிடம் விவரம் கேட்டு எழுதி கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். என்னிடம் சிசிடிவி கேமராவை போட்டு

காண்பிக்கவில்லை என்றும், நான் யாரையும் சிசிடிவி கேமராவை பார்த்து அடையாளம் காட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்தமட்டில் போலிசார் எப்படி சாட்சி சொல்ல வேண்டும் என்று என்னிடம் சொல்லிக் கொடுத்ததின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரேதம் கிடந்ததை நான் பார்த்த பிறகு இதுவரை என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எஸ்.ஐ. அல்லது ஏட்டு விசாரித்தாரா என்று என்னால் சொல்ல முடியாது. நான் உண்மைக்குப் புறம்பாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495 / 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.4**

| | | |
|---|---|---|
| பெயர் | – | பழனி |
| கணவர் பெயர் | – | கலிதீர்த்தபெருமாள் |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| சாதி | – | |
| மதம் | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. N.Venkateshwaran in accordance with the Provisions of Act X of 1873 on **the 26th day of July 2023.**

(எதிரி ஆஜர்.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தச்சநல்லூர் மேலகரையில் குடியிருந்து ஆட்டுத்தோல் வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன மாயாண்டியை எனக்குத் தெரியும். 26.6.2022ம் தேதி 11 மணியளவில் எனது வீட்டிற்கு மாயாண்டியும், மதனும் வந்தார்கள். நான் வியாபாரத்திற்கு போய்விட்டு வீட்டு பக்கத்தில் வரும்போது வீட்டில் ஆட்டுத்தோல் போட்டிருக்கிறேன். எடுத்துக்கொள் என்று சொல்லிவிட்டு இருவரும் சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், எனக்கு வழக்கைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போது நீதிமன்றத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல அன்றையதினம் நான் யாரையும் பார்க்கவில்லை என்றும், என்னிடம் ஆட்டுத் தோல் போட்டிருக்கிறேன் என்று யாரும் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் என்னை சாட்சியாக போடப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன மாயாண்டி எனக்கு மருமகன் உறவுமுறை ஆவார். மாயாண்டி வீடும் என்னுடைய வீடும் வெவ்வேறு ஊர்களில் உள்ளது. இந்த வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றும், இறந்தவருக்கு சொந்தக்காரர் என்று சொல்லி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 11 மணிக்கு மாயாண்டி என்னிடம் ஆட்டுத் தோலை வீட்டில் போட்டிருப்பதாக சொல்லிய தகவலை போலிசில் நான் சொல்லவில்லை. மாயாண்டியின் மனைவியிடம் சொன்னேன். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495 / 2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.5**

| | | |
|---|---|---|
| பெயர் | – | செல்லத்துரை |
| கணவர் பெயர் | – | கிருஷ்ணன் |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| சாதி | – | |
| மதம் | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. N.Venkateshwaran in accordance with the Provisions of Act X of 1873 on **the 26th day of July 2023.**

(எதிரி ஆஜர்.)

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் கரையிருப்பில் குடியிருந்து சுப்புராஜ் மில்லில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன மாயாண்டி என் மனைவியின் தாய்மாமா. 26.6.2022 ம் தேதி நான் வேப்பங்குளம் ஊருக்கு என் நண்பரை பார்த்துவிட்டு கரையிருப்புக்கு வந்து கொண்டிருக்கும்போது எனக்கு எதிரே எனது சித்தப்பா TVS XL வண்டியில் எனது சித்தப்பாவும், மாரிமதனும் வந்து கொண்டிருந்தார்கள். என் சித்தப்பா பின்னால் உட்கார்ந்து இருந்தார். மாரி மதன் வண்டியை ஓட்டி வந்தார். சித்தப்பாவிடம் எங்கே போகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் ஆடு வாங்க போவதாக சொன்னார். அதன் பிறகு சித்தி சித்தப்பாவை காணவில்லை

என்று சொன்ன பிறகு தான் எனக்குத் தெரிய வந்தது. 27.6.2022ம் தேதி எனது சித்தி, சித்தப்பாவை காணவில்லை என்று புகார் கொடுக்க போனபோது எனக்கு தெரிய வந்தது. 1.7.2022ம் தேதி ஒரு பிணம் சிதம்பரம் நகர் ஹவுசிங்போர்டு காலனியில் கிடப்பதாக தெரிய வந்து தச்சநல்லூர் காவல்நிலையத்தில் இருந்து தகவல் வந்து பார்க்க போனேன். சித்தி, சித்தப்பா உடலில் இருந்த சட்டை, அவர் அருகில் இருந்த கூடை, கயிறு ஆகியவற்றை பார்த்து என் சித்தப்பா தான் என்று சொல்லி அடையாளம் காட்டினார். 27.7.2022ம் தேதி தாழையூத்து காவல்நிலையத்தில் இருந்து நானும், சித்தி, பழனி ஆகியோர்கள் சென்றோம். விஏஓ முன்னிலையில் தாழையூத்து காவல்நிலையத்தில் போலிசார் சிசிடிவி கேமரா பதிவுகளை காட்டினார்கள். அதில் எனது சித்தப்பா வண்டியின் பின்னால் இருந்தார். வண்டியை ஓட்டிச் சென்றது மாரிமதன் என்று தெரிந்தது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

காவல்நிலையத்தில் இருந்து எங்களுக்கு தகவல் கிடைத்த நேரம் எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் இருந்து எஸ்.ஐ. தகவல் சொன்னாரா அல்லது ஏட்டு தகவல் சொன்னாரா என்று எனக்குத் தெரியாது. ஆனால் தச்சநல்லூர் காவல்நிலையத்தில் இருந்து தகவல் வந்தது. நான் அன்றையதினம் வேப்பங்குளத்திற்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தேன். நான் வேப்பங்குளத்திற்கு சென்றுவிட்டு வரும்போது தான் எனது சித்தப்பாவை எங்கு போகிறீர்கள் என்று கேட்டேன் என்று போலிசாரிடம் சொன்னேன். தாழையூத்து காவல்நிலையத்தில் இருந்து என்னை விசாரித்து எழுதிக் கொண்டு கையெழுத்து வாங்கினார்களா

என்றால் இல்லை. சம்பவம் குறித்து என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து விஏஓ–விடம் எதுவும் விசாரித்தேனா என்றால் இல்லை. தச்சநல்லூர் காவல்நிலையத்தில் சென்று ஏதாவது கண்டுபிடித்தீர்களா என்று கேட்டேனா என்றால் கேட்டேன். இந்த வழக்கு குறித்து நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. இறந்து போன நபர் எனக்கு உறவினர் என்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்துறையினர் சொல்லிக் கொடுத்ததின் பேரில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை